இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 08-08-2025

# ஓராயிரம் முறை சொல்வோம்!

‘பாவி’ சண்முகமாக இருந்து, ‘காவி’ சண்முகமாக ஆகி இருக்கும் சி.வி.சண்முகத்தின் உச்சந்தலையில் ஓங்கிக் கொட்டி இருக்கிறது உச்ச நீதிமன்றம்.

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெயரைப் பயன்படுத்தக் கூடாதாம். ‘ஸ்டாலின்’ என்ற பெயரைப் பார்த்தாலே பயம் வருகிறது பழனிசாமி கூட்டத்துக்கு. அதனால் சண்முகத்தை இறக்கி விட்டு வழக்குப் போட வைத்தார். ஆனால் அது உச்சநீதிமன்றத்தில் செல்லுபடி ஆகவில்லை. ‘இப்படி ஒரு அபத்தமான வழக்குப் போட்டதற்காக இருபது லட்சம் ரூபாய் அபராதம் போடட்டுமா?’ என்று கேட்ட உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வு, ‘ஐயோ பாவம்’ பார்த்து பத்து லட்சம் ரூபாயை அபராதமாகவே போட்டு விட்டார்கள். இதன்பிறகாவது பழனிசாமி - சண்முகம் கூட்டத்துக்கு உறைக்குமா எனத் தெரியவில்லை.**

தமிழ்நாடு அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் விதித்த தடையை நீக்கி உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

தமிழ்நாடு அரசின் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்துக்கு எதிராக அரசியல் வன்மத்தோடு அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.சண்முகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். சி.வி.சண்முகத்தின் மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், தமிழ்நாடு அரசின் திட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் பெயரை பயன்படுத்த தடை விதித்தது. சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக தி.மு.க. மற்றும் தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

**‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம், பொதுமக்கள் சார்ந்த திட்டம் என்றும், இதுவரை 9 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், வழக்கு தொடர்ந்த நபர் முன்பு அமைச்சராக இருந்து 25 திட்டங்களை அப்போதைய முதலமைச்சர் பெயரில் செயல்படுத்தியவர் என்றும், தற்போது அவர் அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார் என்றும் அரசு தரப்பிலும் தி.மு.க. தரப்பிலும் வாதங்கள் வைக்கப்பட்டன. இதனையடுத்து, தமிழ்நாடு அரசின் திட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் பெயரை பயன்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் விதித்த தடையை நீக்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.**

**“அரசியல் தலைவர்கள் பெயரில் திட்டங்கள் செயல்படுத்துவது நாடு முழுவதும் பின்பற்றப்படும் ஒரு நிகழ்வாக உள்ளது”** என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பெயரிலும் இது போன்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதாக தெரிவித்த நீதிபதிகள், ஒரு அரசியல் தலைவரை மட்டும் தேர்ந்தெடுத்து மனுதாரர் வழக்கு தொடர்ந்து இருப்பதாகவும், இது அவரது அரசியல் உள்நோக்கத்தை காட்டுகிறது என்றும் கண்டனம் தெரிவித்தனர்.

மனுதாரர் சட்டத்தை தவறாக புரிந்து கொண்டு மனுத்தாக்கல் செய்து இருப்பதாகவும், இது சட்ட நடைமுறையை தவறாக பயன்படுத்துவதாகும் என்றும் நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர். வழக்கு தொடர்ந்த சி.வி.சண்முகத்துக்கு ரூ.10 லட்சம் அபராதம் விதித்த நீதிபதிகள், அபராதத் தொகையை ஒரு வாரத்தில் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டனர். அபராதத் தொகையை ஒரு வாரத்திற்குள் செலுத்தத் தவறினால் சி.வி.சண்முகம் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

**சூடு,சொரணை இருந்தால் சண்முகம், பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும்.**

**★ உங்களுடன் ஸ்டாலின்**

**★ நலம் காக்கும் ஸ்டாலின்**

**★ ஓரணியில் தமிழ்நாடு - ஆகிய முன்னெடுப்புகள் கோடிக் கணக்கான மக்களை நாள்தோறும் சென்றடைந்து வருகிறது. இந்த மூன்று முன்னெடுப்புகளும் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம் என்பது மிகமிக முக்கியமானது.**

அரசுக்கும் மக்களுக்குமான நெருக்கத்தை அதிகரித்து விட்டது உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் ஆகிய திட்டங்கள். கோரிக்கை வைத்தால் உடனே நிறைவேறும் என்று மக்கள் உறுதியாக நம்பி வந்து மனுக்களைக் கொடுக்கிறார்கள். இந்த நல் நம்பிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்றுவிட்டார்கள் என்பதுதான் பழனிசாமிக்கு ஏற்பட்டுள்ள கடுப்பாகும். பழனிசாமியிடம் மனுக் கொடுத்தால் குப்பைக்குப் போகும் என்பதை அறிந்தவர்கள் தமிழ்நாட்டு மக்கள். அதனால்தான் அவரைத் தோல்வி அடையச் செய்து வீட்டுக்கு அனுப்பினார்கள்.

**‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ என்ற முன்னெடுப்பு மூலமாகத் தேர்தலுக்கு முன் பெற்ற மனுக்களை முதலமைச்சர் ஆன 100 நாட்களுக்குள் தீர்த்து வைத்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘முதல்வரின் முகவரி’ என்ற திட்டத்தைத் தொடங்கி, அதற்காக தனி அலுவலகத்தை உருவாக்கி அனைத்து மனுக்களுக்கும் உடனுக்குடன் தீர்வு கண்டு வருகிறார் முதலமைச்சர் அவர்கள். ‘நீங்கள் அரசுக்கு அனுப்ப வேண்டாம், நாங்களே உங்கள் வீட்டுக்கு அருகில் வந்து மனுக்களைப் பெற்றுக் கொள்கிறோம்’ என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்ற முகாம்கள் ஆகும்.**

ஒரு நியாயமான எதிர்க்கட்சி, ஒரு நல்ல எதிர்க்கட்சி இந்தத் திட்டத்தை வரவேற்றிருக்க வேண்டும். ‘மக்கள் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றித் தாருங்கள்’ என்று கோரிக்கை வைத்திருக்க வேண்டும். மாறாக, ‘மக்களிடம் மனு வாங்குவதே தவறு’ என்ற உள்நோக்கத்தோடு ஒரு வழக்கை தாக்கல் செய்கிறது அ.தி.மு.க. என்றால் அவர்களது நோக்கம் ‘ஸ்டாலின்’ என்ற பெயர் மட்டுமல்ல; மக்களின் கோரிக்கைகள் நிறைவேறிவிடக் கூடாது என்ற கெட்ட எண்ணமும் அதிகமாக இருக்கிறது. அதன் அடையாளம்தான் இந்த வழக்கு ஆகும்.

**‘ஸ்டாலின்’ என்ற பெயரைச் சூட்டக்கூடாது என்று சொல்வதற்கான அருகதை அ.தி.மு.க.வுக்கு இல்லை. எல்லாத் திட்டத்துக்கும் ‘அம்மா’ பெயர் சூட்டியவர்களுக்கு இதைச் சொல்ல அருகதை இல்லை. ஆட்சி மாற்றத்துக்குப் பிறகும் ‘அம்மா’ பெயரை நீக்காமல் வைத்திருப்பதும் இன்றைய முதலமைச்சரின் பெருந்தன்மை ஆகும். அதைப் புரிந்து கொள்ளும் பக்குவம் பழனிசாமிக்கு இல்லை.**

**நாம் ‘ஸ்டாலின்’ என்ற பெயரை ஓராயிரம் முறை சொல்வோம்!**



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று (07.08.2025) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை இருக்கும் இடத்திலிருந்து மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவர்களின் நினைவிடம் வரை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## “திராவிட மாடல்” நாயகரே! உங்களின் செயல்கள்

# தமிழர்களுக்கு நலம் பயக்கும் என்பது திண்ணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – பேராசிரியர் புதல்வர் அ.அன்புச்செல்வன் கடிதம்!

**சென்னை, ஆக. 8-**

**“திராவிட மாடல் நாயகரான தாங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தமிழர்களுக்கு நலம் பயக்கும் என்பது திண்ணம்” என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன் கடிதம் எழுதியுள்ளார்.**

அவரது கடிதம் வருமாறு:-

**அன்புத் தோழர் முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு,**

இனிய வணக்கம்.



தாங்கள் உடல் நலம் பெற்று மீண்டும் மக்கட் தொண்டில் ஈடுபடுவது கண்டு மகிழ்ந்தேன்.

நலம் பெற்று திரும்பிய உங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் சிறிது நாட்கள் சென்று நேரில் வந்து தங்கள் நலனைப் பற்றி விசாரித்து விட்டுச் செல்கிறேன்.

மக்களுக்கிடையே இருப்பதுதான் உங்களுக்கு அருமருந்தாக உள்ளது. மக்களும் உங்கள் மீது அளவற்ற அன்பும், அக்கறையும் கொண்டுள்ளனர் என்பதை கண்டும் கேட்டும் அகமகிழ்ந்து போனேன்.

எங்களைப் போன்றவர்களிடம் ஏராளமான நண்பர்களும், பொதுவானவர்களும் தங்களின் உடல் நிலைப் பற்றி தொடர்ந்து விசாரித்து வந்தனர். இதன் மூலம் மக்கள் உங்களிடம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தினர்.

ஒன்றிய அரசின் புள்ளியியல் துறை மற்றும் திட்ட செயலாக்கத்துறை வெளியிட்டுள்ள மாநிலங்களுக்கு இடையேயான பொருளாதார வளர்ச்சி விகிதம் அனைவருக்கும் மகிழ்ச்சியை அளித்துள்ளது.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கு வளர்ச்சியை 14 ஆண்டுகளுக்கு பிறகு 11.19% வளர்ச்சியை எட்டியுள்ளது.

இது 2010-11 ஆண்டில் கலைஞரின் தலைமையிலான திமுக ஆட்சியில் அடைந்த 13.16 சதவிகித வளர்ச்சியை இனி வரும் ஆண்டுகளில் எட்டும் என்பது உறுதி. தந்தைக்கும் தனயனுக்கும் இடையே உள்ள இந்த ஆரோக்கியமான போட்டி தமிழர்களுக்குப் பயனளிக்கும்.

2030 ஆம் ஆண்டுகளுக்குள் ஒரு டிரிலியன் டாலர் பொருளாதாரம் என்ற உங்கள் இலக்கை எட்டும் என்றும் தெரிவித்துள்ளது. இப்பொருளாதார வளர்ச்சியின் மூலம் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ள பற்றாக்குறை குறையும் என்பதும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

உங்களின் நோக்கம் நிறைவேற தாங்கள் எடுத்த முயற்சிகள் வெற்றி பெறுகிறது என்பது தங்களுக்கு மட்டுமல்ல; ஒவ்வொரு தமிழனுக்கும் பெருமை சேர்க்கும்.

தமிழ் மொழி நலன், தமிழர் நலன், தமிழ்நாட்டின் நலம் காக்கும் அரிய பொறுப்பு உங்களிடம் உள்ளது. அவைகளை காக்கவும், தொழிற்வளர்ச்சி, வேலைவாய்ப்பை பெருக்கவும் திராவிட மாடல் நாயகரான தாங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தமிழர்களுக்கு நலம் பயக்கும் என்பது திண்ணம்.

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்க முடையா னுழை.** (குறள் 594)

முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியின் பொழிப்புரை :

உயர்வு, உறுதியான ஊக்கமுடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களிடம் போய்ச் சேரும்

மேற்கூறிய குறளுக்குப் பொருத்தமானவர் தாங்கள்.

வாழ்க தங்கள் தமிழர் தொண்டு!!

வெல்க திமுக !!!

நன்றி, வணக்கம்,

இவண்,

**அ. அன்புச்செல்வன்**

06 - 08- 2025

இவ்வாறு அ.அன்புச் செல்வன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# விக்கிரவாண்டியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதிய உழவர் சந்தை!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆய்வு!

*விக்கிரவாண்டி, ஆக.18-*

*விக்கிரவாண்டியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உழவர் சந்தையை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆய்வு செய்தார்.*

*விக்கிரவாண்டி பேருராட்சிக்கு உட்பட்ட நகர் பகுதி மத்தியில் பேருந்து நிலையத்தின் பின்புறம் ரூபாய் 1.50 கோடி மதிப்பில் புதிய உழவர் சந்தை கட்டப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் 90 சதவிகிதம் முடிந்த நிலையில் நேற்று முந்தினம் பிற்பகல் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆய்வு செய்தார்.*

*அப்போது அவரிடம் பேரூராட்சி மன்ற சேர்மன் அப்துல் சலாம். உழவர் சந்தைக்கு சுற்றுச் சுவர் அமைத்து தருமாறு கோரிக்கை வைத்தார்.*

*பின்னர் நிருபர்களிடம் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் கூறியதாவது: விவசாயிகள் நலன் கருதி அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., சட்டசபையில் கோரிக்கை வைத்ததின் பேரில் முதல்வர் ஸ்டாலின் புதிய உழவர் சந்தைக்கு கட்டிடம் கட்ட ஆணையிட்டார். அதன் பேரில் உழவர் சந்தை கட்டும் பணி தீவிர மாக நடைபெற்று முடியும் நிலையில் உள்ளது.*

*விவசாயிகள் பயன்பாட்டிற்காக விரைவில் திறக்கப்படும் என கூறினார். ஆய்வின் போது அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. மாவட்ட சேர்மன் ஜெயச்சந்திரன். முன்னாள் எம்.எல்.ஏ. புஷ்பராஜ், ஒன்றிய சேர்மன்கள் சங்கீத அரசி ரவி துரை, வாசன், பேரூராட்சி சேர்மன் அப்துல் சலாம், துணை சேர்மன் பாலாஜி, தாசில்தார் செல்வமூர்த்தி, பேரூராட்சி செயல் அலுவலர் ஷேக் லத்தீப், ஒன்றிய செயலாளர்கள் ஜெய ரவி துரை வேம்பி ரவி, ஜெய பால், ஆர்.பி.முருகன், நகர செயலாளர் நைனாமுகமது. மாவட்ட தலைவர்கள் பாபு ஜீவானந்தம், முரளி, சீனுவாசன், பேரூராட்சி கவுன்சிலர் வீரவேல், இளைஞரணி அமைப்பாளர் பாலகிருஷ்ணன், துணை அமைப்பாளர் சிவா, தொகுதி ஒருங்கிணைப்பாளர் சுந்தர், பிரதிநிதி அசோக்குமார். ஒன்றிய கவுன்சிலர்கள் செல்வம். அருணாசலம் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.*

# முதலமைச்சர் சொன்னார்... செய்தார்!

## அமைச்சர் – டி.ஆர்.பி.ராஜா வலைதளப் பதிவு

**சென்னை, ஆக. 7 -**

**“முதலமைச்சர் சொன்னார், செய்தார்!” என்று தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கூறியுள்ளார்.**

இது குறித்து அவர் தமது வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-



கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக திருச்சி சிறுகனூரில் நடைபெற்ற தேர்தல் சிறப்பு மாநாட்டில் 7 அம்ச உறுதிமொழிகளை வெளியிட்டு மக்களிடம் வாக்கு கேட்டார் திராவிட நாயகன் நம் கழகத் தலைவர்.

அதில் முதல் அம்சம், பொருளாதாரம். “வளரும் வாய்ப்புகள்வளமான தமிழ்நாடு அடுத்த பத்தாண்டுகளுக்குள் இரட்டை இலக்க பொருளாதாரத்தை எட்டுவது முதல் இலக்கு” என்று உறுதியளித்தார்.

அவரது வாக்குறுதியை நம்பி வாக்களித்து தன்னை முதலமைச்சராக்கிய மக்களுக்காக ஓயாது உழைத்து, தமிழ்நாட்டு பொருளாதாரத்தை இரட்டை இலக்கத்தில்வளர்ச்சியடையவைத்து, தான் அளித்த உறுதிமொழியைக் காப்பாற்றியுள்ளார்.

திருச்சி சிறுகனூரில் கழகத் தலைவர் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்த நாள் 2021 மார்ச் 7.

தமிழ்நாடு 11.29% என்ற இரட்டை இலக்கப் பொருளாதாரத்தை எட்டியிருப்பதை ஒன்றிய அரசின் புள்ளிவிவரத்துறை அறிவித்துள்ள நாள் 2025 ஆகஸ்ட் 5.

பத்தாண்டுகளுக்குள் இரட்டை இலக்கப் பொருளாதாரத்தை அடைவோம் என்ற நம் தலைவர் அதனை நான்கே ஆண்டுகளில் சாதித்துக் காட்டியிருக்கிறார்.

ஆகையால்தான் இந்தியாவிலேயே முதன்மை முதலமைச்சராகத் திகழ்கிறார் நம் திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கூறியுள்ளார்.